

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2026 விழாவில் கலந்துகொண்டு, உரையாற்றினார். இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.1.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர் திருமதி பத்மா 11.1.2026 அன்று சென்னை, தியாகராயர் நகர், வண்டிக்காரன் சாலையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்து, பிறருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்ததைப் பாராட்டி, அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் – 2026” விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்தின் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஆர்.ராஜேந்திரன், எஸ்.எம்.நாசர், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சுற்றுலாத்துறை மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஷேனு அகர்வால், என்.வி.குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் (CEO ENNVEE Group) வீர வேணுகோபால், M/s. Switch Mobility நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எஸ்.கணேஷ்மணி, அயலகத் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அமெரிக்கவாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்டது!

# அயலகத் தமிழர் தினத்தையொட்டி இரட்டைத் தள மின்சாரப் பேருந்து சேவை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 14 -**

**அயலகத் தமிழர் தினத்தையொட்டி, பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்து சேவையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து, தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் - 2026” விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் (NRI) மற்றும் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனம் இணைந்து, ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் ஒரு இரட்டைத் தள மின்சார (EV) பேருந்தை ஹிந்துஜா அறக்கட்டளை, மும்பை மூலமாக தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் – 2026” விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அயலகத் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்தின் சேவையினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு (TTDC) பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை இயக்குவதற்காக வழங்கப்பட்ட இப்பேருந்தின் சேவையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டார்.

இப்பேருந்து மூலம் இயக்கப்படும் சுற்றுலா சேவைகள், சென்னை நகரின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் கட்டடக் கலை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள், குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த, தகவல் சார்ந்த மற்றும் அனுபவமிக்க சுற்றுலா அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது.

முதற்கட்டமாக சென்னையில், முன்மொழியப்பட்ட சுற்றுலா வழித்தடத்தின் படி, TTDC தலைமையகம் - LIC - ஸ்பென்சர் பிளாசா - மக்கா மஸ்ஜித் - பி.ஓர் & சன்ஸ் (வாட்ச் டவர்) - பல்லவன் சாலை - பாடிகார்டு முனீஸ்வரர் கோவில் - ராஜா அண்ணாமலை மன்றம் - சென்னை உயர்நீதிமன்றம் - தலைமைச் செயலகம் - ரிசர்வ் வங்கி - சென்னை துறைமுகம் - வெற்றி போர் நினைவுச்சின்னம் - நேப்பியர் பாலம் - பேரறிஞர் அண்ணா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி. ஆர். அவர்கள் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆகியோரது நினைவிடங்கள் - மெரினா கடற்கரை - கலங்கரை விளக்கம் - பட்டினப்பாக்கம் கடற்கரை - சாந்தோம் தேவாலயம் - அகில இந்திய வானொலி - கலங்கரை விளக்கம் காவல்துறை தலைமை அலுவலகம் - குயின்மேரீஸ்கல்லூரி - விவேகானந்தர் இல்லம் - பிரெசிடென்சி கல்லூரி - எழிலகம் - சென்னை பல்கலைக்கழகம் - தூர்தர்ஷன் கேந்திரா - இராஜாஜி மண்டபம் - ஓமந்தூரார் அரசு மருத்துவமனை - TTDC தலைமையகம் ஆகிய வழித்தடங்களில், நகரின் முக்கிய சுற்றுலா மற்றும் பாரம்பரிய இடங்களை முழுமையாகக் காணும் வகையில் பனோரமிக் (Panoramic) பார்வை வசதியுடன் இப்பேருந்தின் சேவை இயக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சுற்றுலாத்துறை மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஷேனு அகர்வால், என்.வி.குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் (CEO ENNVEE Group) வீர வேணுகோபால், M/s. Switch Mobility நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எஸ். கணேஷ்மணி, அயலகத் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.